கொண்டதை விடுமா முதலை

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (8—9—49) வெளியீடு (9—9—49) [இதழ் 30

எஜமான் நிலையில் சென்னை சர்க்கார் — எடுபிடி நிலையில் நகரசபைகள்!

பணத்தைப் பாழ்படுத்த மறுக்கும் நகரசபைகள் —

அந்தப் போக்குக் கண்டு சீறும் சர்க்கார்

கதர்ப் பிரச்னையில் கூச்சலும் கொந்தளிப்பும்!

"ஏண்டா பயலே! என்னையா எதிர்க்கிறே? நான் சொன்னா சொன்னது தாண்டா!"

"இல்லிங்க! எஜமான்! அந்தத் துணி வேண்டாங்க! ரொம்ப கோணியாட்ட இருக்கிதுங்களே! பார்க்கிறதுக்கு அசிங்கமா இருக்குதுங்களே!"

"ஏண்டா! எதிர்த்தா பேசறே! எனக்குத் தெரியாதாடா அதெல்லாம்! எச்செலெய எடுடாண்ணா, சாப்பிட்டவங்கள ஏண்டா என்னறே?"

"என்னபோங்க எஜமான்! எதைச் சொன்னாலும் கோவிச்சிக்கிறீங்க! நல்ல துணியா, அதிக நாள் ஒழைக்காராப்போல கொடுங்கோன்னா இவ்வள கோபிக்கிறீங்களே!"

"கோபிச்சிக்கிறதும் கோபிச்சிக்காம இருக்கிறதும், என் வேலெடா! நீ யாருடா அதெல்லாம் கேக்க? நான் கட்டுன்னு கொடுக்கிற துணியைத் தாண்டா கட்டிக்கோணம் நீ!"

"எஜமா கொடுக்கிறதா இருந்தாலும், கொஞ்சம் நாள்பட ஒழைக்கிறதா கொடுக்கக் கூடாதுங்களா? இதெ கேக்க எனக்கு உரிமெ இல்லிங்களா?"

"இன்னடா எதிர்த்து எதிர்த்துப் பேசறே? வேலைய விட்டே தொலைச்சுடுவேன்! பத்திரம்!"

"இல்லிங்க எஜமான்! அது மாதிரி ஒண்ணும் செய்துடாதிங்க! எதெக் கொடுத்தாலும் கொடுங்க! இனி உங்கப் பேச்சுக்கு மறு பேச்சி பேசறது இல்லிங்க!"

* * *

"என்ன கண்டானுங்க இவனுங்க — எனக்கு இருக்கிற வேதனையெ? எனக்கு மேலே இருக்கிறவங்க, என்னெ கொட்டற குட்டலெ, இவனுங்க யோசிச்சிப்பாத்தா தெரியும்! இவனுங்க என்னெ எதிர்க்கிற மாதிரியா, நான் அவங்களெ எதிர்த்தா, அவ்வளவுதான், ஒரே நிமிஷத்திலே, ஒழிச்சிடுவாங்களே! இவனுங்களுக்கு எங்க அதெல்லாம் தெரியப் போவது?"

* * *

இப்படிப் பேச்சுவார்த்தை ஒரு எஜமானுக்கும் எடுபிடிக்கும் நடப்பது, எந்த இடத்திலும் சர்வசாதாரணமாக, தினம் தினம், நாம் பார்க்கின்ற — கேள்விப்படுகின்ற விஷயமாகும். இதுபோலவே எஜமானன் நிலையில் இருக்கிறவர்களும், தாங்கள் கொஞ்சம் நிமிர்ந்து நடக்க முயற்சித்தால், ஒரு குட்டு குட்டி, புத்தி கற்பிக்கிற தோரணையில், மேல் நிலையில் இருப்பவர்கள் இருந்தால், எடுபிடியை மிரட்டி அடக்க நினைக்கும் அந்த எஜமானரும், தமது நிலையை நினைத்து மனம் நோகத்தான் செய்வார்.

தனி நபர்கள் விஷயத்தில் இத்தகைய உறவுமுறை இருந்து வருவதும் கூடாது. அச்சுறுத்தும் பண்பும் — அஞ்சி அஞ்சி வாழும் நிலையும் எந்தச் சமுகத்திலும் இருக்கக்கூடாது என்று, அறிஞர்கள் பலர் அவாவுகின்றனர். பகுத்தறிவாளர்கள் கடனாற்றுகிறார்கள். வெற்றி, விரைவில் கைவல்கர் வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நிற்க.

காடாளுவோர், அந்தப் பொறுப்பில் அமராத முன்னர் 'உரிமை' பற்றிப் பேசி, மக்கள் சலிப்படையும் அளவிற்கு, 'உரிமை' விரிவுரை ஆற்றினர். அரியாசனம் ஏறினதும், 'பாதுகாப்பு' என்னும் பாட்டிசைத்து வருகிறார்கள் மக்கள் காது செவிடுபடும்படியாக. நிலைமை மாற்றம், அவர்களைச், சிந்தனையி[illegible]லும், இத்தக் கோலம் கொள்ளச் செய்திருக்கிறது.

ஆளவந்தார்களின் எதேச்சாதிகாரப் போக்குக் கண்டு, ஆகாது இந்த ஆபத்தான போக்கு என, கட்டுரிமையோடு கூறினாலும், எரிச்சல் கொண்டு இயம்பினாலும், 'பாதுகாப்பு'ப் பெயர் கூறி, சட்டத்தைக் கொண்டு சாடி, படையை ஏவி, புத்திமதிகளை, அடக்கி விடுகிறார்கள். காட்டில் காய்ந்த நிலவாகிறது மாறுபட்டாரின் முயற்சி.

"ஒரு விண்ணப்பம் கேட்டருளும ஐயே! உங்கள் கட்டளையைக் கொஞ்சம் மாற்றியருளும் ஐயே! வீண் கோபம் வேண்டாம் ஐயே! விதண்டா வாதம் வேண்டாம் ஐயே!"

இப்படி, கொண்டிருக்கும் கருத்தை வெளியிடுவதற்கு முன்னால் பணிவான அர்ச்சனைகளைச் சேர்த்து, ஆளவந்தார்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

"கதர்த் துணி, நீடித்து உழைக்கவில்லை ஐயனே! மில் துணியைவிட விலையிலும்கூடுதலாக இருக்கிறது ஐயனே! சிப்பந்திகளுக்கு மில் துணி ஆடை அளிக்க அருள்புரிய வேண்டும ஐயனே!"

இந்த ஆசையை, அஞ்சி அஞ்சி, ஆளவந்தார்களுக்கு அறிவுறுத்த, முன்குறிப்பிட்ட, பணிவு தோய்ந்த தேன்மொழியினைத் தூதாக அனுப்பின சில நகரசபைகள்.

மக்களுக்குப் பயனளிக்கும் வேறு பல நல்ல காரியங்களுக்குச் செலவிடப் பணம் போதாமல் திண்டாடும் நிலையில், நகரசபைக்கு வரி செலுத்தவோரின் பணம், அர்த்தமற்ற ஒரு காரியத்திற்கு - கதர்த் துணி வாங்குவதற்கு - பயன்படுத்த வேண்டுமென்று, கட்டாயப்படுத்த அதிகாரம் இருக்கிறது என்னும் ஒரே ஒரு காரணத்தைக் கொண்டு, தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட நகரசபைகளைத் தங்கள் விருப்பத்திற்கு மாறாக, நடந்து கொள்ளக் கட்டளை பிறப்பிப்பது கூடாது — அநீதி அதர்மமுமாகும்.

நகர சபை சிப்பந்திகளுக்கு, அலுவல் நேரத்தில் அணிந்து கொள்வதற்கான ஆடைகளை, நகர சபை இனமாக வழங்க வேண்டியது முக்கியந்தான். வரவேற்கத் தகுந்ததுதான். அதற்காக, விலை குறைவாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாகவும் உள்ள மில் துணிகளை வாங்குவதின் மூலம்தான், மக்களின் வரிப் பணம் நல்ல முறையிலும் சிக்கனமாகவும் செலவிடப் பட்டதாகக் கொள்ளப்படும். மக்களின் வரிப் பணத்தைப் பொறுப்புணர்ச்சியோடு செலவழிக்கும், கடமையுணர்ச்சியுடைய, நகரசபை உறுப்பினர்கள், இந்த உயர்ந்த முறையைத்தான் விரும்புவார்கள். ஒரு தத்துவத்தின் மீது சிலர் கொண்டிருக்கும் மயக்கத்திற்காகப் பொதுப்பணத்தைப் பாழாக்க வேண்டுமென்று விரும்புவதும், அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவத்தில், அதற்கான உத்தரவு போடுவதும், மக்களை மதித்து நடக்கும் மாண்புடையவர்கள் செய்கின்ற செயலன்று.

விழுப்புரம், நகரசபை ஊழியர்களுக்கு உடை வழங்கக் கதர்த் துணி வாங்க மறுக்கிறது. மில் துணி தேவை என்று விரும்புகிறது. நகரசபைப் பிரதிநிதிகள் அதற்கான தீர்மானத்தைச் செய்து, சென்னை சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

இந்த நல்ல தீர்மானத்தைச் செய்வதின் மூலம், மற்ற நகராட்சி மன்றங்களுக்கு வழி காட்டியது விழுப்புரம். தமிழ் நாட்டில், இது!

நந்தியால், நகரசபை இதனையே பின்பற்றிற்று. கதர் வேண்டாம்? மில் துணி நயமாக இருக்கிறது. அதிக நாள் உழைக்கிறது என்று உணர்த்திற்று. சென்னை சர்க்காருக்கு நந்தியால். இது ஆந்திர நாட்டில்!

குடியேற்றம், விழுப்புரம் - நந்தியாலைப் பின்பற்றி இதே

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

ஆணுக்கொரு நீதி - பெண்ணுக்கொரு நீதியா?

நீதிபதியின் விந்தைப் போக்கு

சுவர்ணம்பாள் என்ற பெண்ணை மாமியும் மாமனும் துன்புறுத்தினர்; கணவனும் அன்பு காட்டாமல் பெற்றோருடன் சேர்ந்து துன்புறுத்தத் தொடங்கினன். ஒரு மகவை ஈன்று, மற்றொரு மகவைக் கருக்கொண்டிருந்தும் கணவனுக்கோ, கணவனைப் பெற்றவர்களுக்கோ அப்பெண் மீது அன்பு சுரக்கவில்லை. வேறு வழியின்றி அவள் தாய்வீடேகி, தன வாழ்க்கைக்கு வழி கூறுமாறு நீதி மன்றத்தில் வாதிட்டாள். நீதிபதி அவளுக்கு மாதம் 8 ரூபாய் வாழ்க்கை ஊதியமாகக் கொடுக்குமாறு தீர்ப்பளித்தார். ஆனல் அதனுடன் விஷயம் முடிந்துவிடவில்லை. அந்நீதிபதி, "இளம் பெண்ணாகிய நீ அற்ப ஜீவனாம்சத்திற்கு ஆசைப்பட்டு, உன் வாழ்வைக் கெடுத்துக்கொள்ளாதே! நீ உன் கணவனைத் துறந்தால் அவன் மறுமணம் செய்து கொள்ளலாம். அப்பொழுது உன் வாழ்க்கைதான் வீணாகும், என வே கணவனுடன் போ" என்று அறிவுரை கூறினர். ஆனல் அப்பெண் பிடிவாதமாகக் கணவனுடன் போகமறுத்து விட்டாள். அதன் பிறகே 8 ரூபாய் வாழ்க்கைச் செலவு தருமாறு நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

நீதிமன்றம் ஏறித் தன் நிலையை எடுத்துக்கூறிய பெண்ணின் நிலையை உணரும் சக்தி அந்த நீதிபதிக்கில்லாமற் போனது. ஆணுக்குப் பெண் அடிமையாயிருந்தே வாழவேண்டும்; புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன் என்றே அடங்கியிருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் அந்நீதிபதி அவளுக்கு மட்டும் அறிவுரை பகன்றனர்.

கணவனைத் துறந்தால், அவன் மறுமணம் செய்து கொள்வான் உன் வாழ்வு கெடும் என்று மிரட்டிய அந்த நீதிபதி, "மனைவியைத் துன்புறுத்திக் கொடுமை செய்வதற்காக உன்னையும் உன் பெற்றோரையும் தண்டித்துச் சிறையில் வைப்பேன்" என்று அந்தக் கணவனையும் மிரட்டி, இனி அவளை எக்கொடுமைக்கும் உள்ளாக்காதபடி ஒழுங்காக நடத்த வேண்டும் என்று கட்டளை பிறப்பித்து, பெண்ணை ஒழுங்காக நடத்த வேண்டும் என்னும் ஒழுங்கை அவனும் கடைப்பிடிக்குமாறு செய்திருக்கவேண்டும். ஆனல் நீதிபதி பெண்ணைக்கடிந்தார். [illegible] விட்டுவிட்டார். இது பழங்காலச் சனாதன முறை. இதுவா நோக்கம்! ஆணுக்கொரு நீதி — பெண்ணுக்கொருநீதி பேசுவதற்கா இந்த நீதிமன்றங்கள் இருக்கின்றன

முட்டாள் படையின் முன்னேடும் வீ[ரர்]

வேலூர் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் ஆதரவு தேடு படலத்தில், முன்னேடும் 'வீரராக' இருந்து வருகிறாராம். ஊர்தோறும 'பவனி' சென்று, "ஆதரவுதாரீர், அதற்கப்புறம பாரீர்!" என்று பல்லவி பாடுகிறாராம். பாடலுக்குப் பரிசு 'சொற குட்டுகள்' தாமாம்! ஆரணியில் நண்பர்கள் சிலர், "நீர்தான் படித்தவராயிற்றே; பெரியார்தான் முட்டாள்கள் தேவை என்று சொல்லுகிறாரே; நீர்கூட அவருடன் ஒத்துழைக்க விரும்புகிறீரா" என்று அவரைக் கேட்டார்களாம. அதற்கு அவர், "நான் முட்டாளதான். என்னைப் போன்றவர்களதான் எங்கள படைவரிசைககுத தேவை" என்று கூறினாராம. முட்டாள் படைக்கு முன்னேடும் வீரர்! சரிதானே!

அண்ணாமலை நகரில் மாணவர்கள கேட்ட கேள்விமாரியில் திகைத்து முக்காடித் திணறினாராம! இப்படியே பலவிதம, பல ஊர்களிலும்!

முன 'பவனி' நடக்கட்டும!

முட்டாள் படை திரளட்டும!

மாலை மணி

சென்னை 8—9—49 வியாழக்கிழமை

கேலியும் - கிண்டலும் குறைய வேண்டாம்!

காங்கிரஸ் கட்சிக்கு, மக்களிடம் இருந்து வந்த செல்வாக்கு, தேய்பிறைபோல், தினம் தினம், மறைந்து வருகிறது. மாற்றுக் கருத்தினர் மட்டுந்தான், இவ்வாறு கூறுகிறார்கள் என்பதில்லை. காங்கிரஸ் கட்சியின் மாபெரும் தலைவர்களே, காங்கிரஸ் கோட்டைச் சரிந்துவரும் வேகத்தைக் கண்டு, விம்மி விம்மி, விதவிதமான முறைகளைக் கொண்டு, கோட்டையைச் சீரமைக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியொன்றே போதும், காங்கிரசின் இன்றைய சரிந்துவரும் நிலையை எடுத்துக் காட்ட. காங்கிரஸ் கட்சியின கைக்கு அதிகாரம் மாறினதும, தனக்கே சொந்தமென்று உரிமை பாராட்டி வந்த சேவா உணர்ச்சி, காங்கிரஸ் கட்சியில், செத்துச் சவமாகிவிட்டது. சொந்தக் கட்சியினரின் பதவிவேட்டையும, பணம் ஈட்டும் முயற்சியும், சலுகைகளுக்குப் பல்லிளிக்கும் பண்பும, தீர்க்கமுடியாத தினசரிப் பிரச்னைகளாகி விட்டன காங்கிரஸ் கட்சியில். காந்தியார் மறைவோடு காங்கிரசின் பணிபுரியும் பண்பாடும் மறைந்துபோய்விட்டது.

திமிர்பிடித்த வெள்ளை அதிகாரிகளையும நல்லவர்களாக்கும முறையில், காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஆட்சிநடத்தி வருகிறார்கள். எதிர்காலத்தில் இத்துணைக் கண்டத்திற்கென உருவாக்கப்படும் புது அரசியல், உருவாக்கப்படும் தன்மையைப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம், இன்றைய காங்கிரசின் மனவளத்தை.

நாட்டு மக்கள் அனைவரின் கருத்தையும் அறிந்து புது அரசியல் ஆக்கப்படவேண்டுவதேமுறைஎன்ற இந்தச் சிறு நியாயத்தையும் காங்கிரஸ் கட்சி மறந்துவிட்டது. சொந்தக்கட்சியினரின் தலையாட்டுதலும் கைத்தூக்குதலுமே, அரசியல் அமைப்புக்குப்போதுமென்று காங்கிரஸ் முடிவிற்கு வந்து விட்டது.

இத்துணைக்கண்டத்தைப் பாதிக்கும் குறிப்பிட்ட சில சில விஷயங்களை மட்டும் மத்திய அரசின் அதிகாரத்துக்கும், மற்றப் பெரும்பாலான இனங்களை மாகாண அரசுகளின் அதிகாரத்துக்கும்விட்டு விடும் முறையில், ஒரு கூட்டாட்சி முறையை ஏற்படுத்தி இருந்தால், மொழி வழி, இன வழி, நிலவழி, முதலியவைகளில் மாறுபட்டிருக்கும் இத்துணைக்கண்டத்து மக்கள் அனைவருக்கும், சரி நீதி வழங்கினதாக, ஓரளவிற்காவது தீர்மானிக்கும் நிலை பிறந்திருக்கும்.

இந்த நாட்டு மக்களிடை ஐக்கியத்தை வளர்க்கும் இந்த அரிய வாய்ப்பினை இழந்து விட்டது காங்கிரஸ். இதனால் நாட்டு மக்களிடை வளர்ந்து வர வேண்டிய நட்பு உணர்ச்சியையும் குலைத்து விட்டது. கண்ணை மூடிக்கொண்டு, 'பலம் பொருந்திய மத்திய சர்க்கார்' வேண்டுமென்ற ஆசையில் மற்ற மாகாணத்தின் பகையையும், மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டு விட்டது காங்கிரஸ்.

தனது கையை விட்டு அதிகாரம் வேறு கட்சியின் கைக்குப் போகாமல் இருக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவ்வளவையும் புகுத்தி இருக்கிறது, புதிய அரசியல் அமைப்பில் காங்கிரஸ். பண மூட்டைகள் மேலும வளம் பெரும் வாய்ப்புக்குக் குறைவில்லை. பெரும்பாலான மக்களின் வறுமைப் பிணியைப் போக்க, புதிய அமைப்பில ஏற்பாடு ஒன்றும் கிடையாது.

ஒரு கட்சியின்சர்வாதிகார ஆட்சிக்கு வேண்டிய சகல அம்சங்களும், புதிய அரசியல் ஏற்பாட்டில் அடங்கியிருக்கும் வகையில், வகுத்திருக்கிறது, எதிர்கால அரசியலை காங்கிரஸ் கட்சி.

மக்களை மதிக்காத இந்த ஏற்பாடு என்றும் சாகாவரம் பெற்று இருக்கும்-இருக்க வேண்டும் என்ற பேராசையோடுதான், இந்தப் பெரும் பணியைச் செய்திருக்கிறது காங்கிரஸ். எந்த ஒரு திட்டமும் சிரஞ்சீவியாக இருப்பதில்லை-இருந்ததும் இல்லை, இந்தஉலகத்தில. எனவே, காங்கிரசின் ஆசைக்குமட்டும், அந்தப் பொதுவிதி, விலக்கானதாக இருக்கமுடியாது. புதிய அரசியல் அமைப்பு மாறும்; மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். வேறு அடிப்படையின் மீது, முழு அரசியல் அமைப்பையும் மாற்றி அமைக்க வேண்டிய நிலை, இத்துணைக்கண்டத்து மக்களுக்குக் கண்டிப்பாகஏற்படத்தான் போகிறது. அந்த நாள், நாம் எதிர்பார்ப்பதற்கு, விரைவாகவே வந்து தீரும என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவை இல்லை. அவ்வளவு, மக்களுக்குககேடு செய்யும் விதிகள், அதில் அடங்கி இருக்கின்றன. புதிய அமைப்பை அழித்துவிடும் கிருமிகள், அதிலேயே முளைக்க ஏற்பாடுகள் உள்ளன.

பம்பாயில் பேசி உள்ள தோழர் ஜெயப்பிரகாஷ்நாராயணன், சோஷலிஸ்டு கட்சி பதவியேற்றால், வேறு அரசியல் அமைக்க, ஒரு அரசியல் அக்க மன்றம் கூட்டவேண்டிய அவசியம் இருக்கிறது என்று கூறியுள்ளார். இது வெறும ஜம்பப்பேச்சு என்று காங்கிரஸ்கட்சியினர் கிண்டல செய்வார்கள் என்பதை அனைவரும் அறிவர். இதுவரையில் காங்கிரஸ எந்தஎந்தப் பிரச்னைகளைக் கண்டு, அழித்துவிடலாமென்ற நோக்கத்தோடு, நையாண்டியை ஆயுதமாககொண்டதோ, அந்தப் பிரச்னைகள் அனைத்தும், காங்கிரஸ் கருதியதுபோல், கருகிவிடாமல, நேர்விரோதமாகப் பலம் பெற்று முடிவில் வெற்றியும் பெற்றுள்ளன. எனவே, ஜெயப்பிரகாஷ் கூறுவது; இன்று வெறும் கேலி பேசுவதற் குரிய கோட்பாடாக இருப்பதில் ஆச்சரியமில்லை. பொறுத்திருந்து பார்த்தால், அந்த உண்மை எவ்வளவு விரைவில் வளர்ந்து வெற்றி பெறுகிறதென்பதை; புரிந்து கொள்ளலாம்.

காங்கிரஸ் கட்சியினர், தங்கள் இயல்பை விட்டு விடாமல், இதிலும், கேலி பேச வேண்டும் என்று நாம் ஆசைப் படுகிறோம். கேலியும் கிண்டலும் குறைந்து விடக் கூடாது. மேலும் மேலும் நையாண்டியில் இறங்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உண்மை "பாரதியார்"...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புலவர்கள், ஒரே பொருள் பற்றிப் பல நூல்கள் ஒரேமுறையில் எழுதுவார்கள்.

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும்.

அடுத்தாற்போல் அந்தாதி என்று பல நூல்கள். மற்றும் அம்மானைகள். இப்படித்தான்! புது முறையோ, புதிய பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை எழுத.

இந்த வழியில் புது முறைக்கு எடுத்துக் காட்டு "சிந்து". இதில் அண்ணாமலைச் செட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரைப் பெரிதும் கவர்ந்தது.

திருக்குறள் உரை

அக்காலத்தில் தமிழைப்பற்றி மக்கள் மிகக் கேவலமாக நினைத்தனர். ஒருவர் ஒன்று கூறிவிட்டால், அதைமறுப்பதோ கூடாது. குறிப்பாக, திருக்குறளுக்குப் பலர் உரை யெழுதினார்கள். இதில் பரிமேலழகர் உரைதான் சரி. கவனிக்கப்படவேண்டும் என்கின்றனர். என்? அவருக்குப் பின் அறிவு போய்விட்டதா? நீ ஏன் சிந்திக்கக் கூடாது? பரிமேலழகர் "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும மழை" என்ற குறளுக்குக் கணவனைத் தெய்வமாகக் கொண்டு ஒழுகும் கற்புக்கரசி பெய் என்று சொன்னவுடன் "மழை பெய்யும்' என்று பொருள் கொள்கிறார்.

இதை எப்படி ஒப்புவது! இப்போது மழையில்லையே! கற்புக்கரசி யாரும் 'பெய்'என்று சொல்லவில்லையா? அல்லது சொல்லியும் பெய்ய வில்லையா? அப்படியானால் எல்லாப் பெண்களும் குச்சுக்காரிகளா?

இதற்கு நீ சிந்தித்து வேறு பொருள், தக்க பொருள், ஏன் சொல்லக் கூடாது.

"கணவனைப் பேணும் பெண், "பெய்" என்று வேண்டும்போது காலம் அறிந்து, அவசியமான போது பெய்கின்ற மழையைப் போன்றவள், அக்கணவனுக்கு என்று ஏன் பொருள் சொல்லக் கூடாது. "மழை பெய்தும் கொடுக்கும் பெய்யாதும் கொடுக்கும்" என்று சொல்வதுண்டு. அப்படியின்றி அவசியமுள்ளபோது 'பெய்' என்றதும் பெய்கின்ற மழையைப் போன்றவள் கற்புள்ள மனைவி என்று கொள்க.

புதிய துறையில் எழுது; பொருள் காண முற்படுங்கள். பாரதியைப் பின்பற்றுங்கள். பாரதியார் சுதேசமித்திரனுக்குப் பாண்டியிலிருந்து ஒரு நாள் கவிதையும், ஒரு நாள் கட்டுரையும் எழுதுவார். திடீரென்று அவர்கள் கவிதை வேண்டாம், கட்டுரையே போதும் என்றார்கள்.

அப்போது தெனாட்டுக்கு டாக்டர் கஸின்ஸ் என்று ஒருவர் வந்தார். அவர் பாரதியார் சிறந்த கவிஞர் என்று கேள்விப்பட்டு அவருக்குக்கடிதம்எழுதி, அவர்கவிகளை அனுப்பும்படியும, அதைத் தாம் அவர் கருத்துக்குலையாமலும் ஆங்கிலத்தில்மொழிபெயர்த்துவெளியிடுவதாகவும் எழுதி யிருந்தார். அத்துடன் அவர், தாம் தான் வங்ககவி

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ரவீந்திரநாத்தாகூரின் கவிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் என்றும கூறினார். அதுபோல் பாரதியும் "வேண்டுமடி யெப்போதும் விடுதலைஅம்மா-வேண்டுமடி யெப்போதும் விடுதலை" என்ற பாட்டை எழுதியனுப்பினார். இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அக்காலத்தில் New India பத்திரிகையில் வெளி வந்தது.

இம்மாதிரி இரண்டு மூன்று தடவை வந்ததும் சுதேசமித்திரன் பழையபடி கவிதை கேட்டது. அப்போது பாரதியார் சொன்னார், "தமிழன் கவிதையைப் பிறநாட்டான் புகழ வேண்டும் அப்போது தான் அதனைத் தமிழர் உணர்கிறார்கள்" என்று.

பாரதியார் பண்பு

பாண்டியிலே பாரதியார் பலரும் பார்க்க வேண்டும் என்றே, கடைவீதி நடுவே முஸ்லிம் கடையில் தேநீர் வாங்கி அருந்துவார்.

அவர் ஒருசமயம் "என்ன சுப்புரத்தினம், என் பெண் வேறு ஒரு தாழ்ந்த சாதியானுடைய ரங்கூனுக்கு ஓடிப்போய், அங்கிருந்து எனக்கு "அப்பா நான் இன்னாரோடு இங்கு சுகமே இருக்கிறேன், அவரைத் தான் நான் விரும்புகிறேன், மணம செய்து கொள்ளப் போகிறேன்' என்று எழுதவேண்டும் அதைக் கேட்டு நான் ஆனந்தப்பட வேண்டும் என்றார்.

அவர் சாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை கொண்டார் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.

போற்றுபவர் அவரைத் தூற்றினர்

அவர் இங்கு வந்ததும் அவருக்கும் "பூர்ணதி லேகியம்" நிறையக் கொடுத்தனர். Opium என்னும் அபினியை அளவு மீறிக்கொடுத்தனர். செத்தார். வேண்டுமென்றே அவருடைய சீர்திருத்தக் கருத்துகளுக்காகவே அவர் பழி வாங்கப் பட்டார் என்றே கூறுகிறேன்.

இன்று அவரைப் போற்றுபவர் அன்று அவரைத் தூற்றினர்.

"கல்கி" கிருஷ்ணமூர்த்தி "ஆனந்தவிகடனில்" ஆபாசம்-ஆபாசம் என்று இப் பாடலைக்கிண்டல் செய்தார்.

பெண்கள் மர்மத்தைக் குறிக்கும் பொதுப்பெயரைக் கவிதையில் எழுதியதற்காக "மகா மோசம்" என்று எழுதினார்.

இன்று புகழ்கிறார் என்றால் அது அவர்கள் வழக்கம், வாடிக்கை.

"கல்கி" ஆனந்த விகடனில் அவரை "மட்டக் கவி" என்று எழுதியதைக் கண்டித்து நான "கவிதா மண்டலத்தில்" பாரதி உலகக் கவிதானப்பா?என்று தீட்டினேன்.

அது எனது "கவிதைகள் 2-ம் பகுதியில்" இக் குறிப்போடு வெளியிடப்பட்டிருக்கிறது, கண்டு கொள்க.

அவர் எழுதிய நூல்களை வெளியிட "திருப்புகழ் மணி"யைக் கேட்டாராம். முடியாது என்றாராம். "புரட்சி தேவை" என வெளியேறினேன்" என்று கூறி யிருக்கிறார்.

சுதேச மித்திரனில் பாரதியை ஒழுக்க ஈனன். பூணூல் போடுவது இல்லை, சுருட்டுப் பிடிப்பவன். ஆசாரமற்றவன் என்றெல்லாம் கண்டித்துக் கட்டுரைகள் வந்தன. பாரதி சொல்வார் "பூணூல் தான் ஆசாரமா? உச்சிகுடுமி, நான்கைந்து மயிர்கள்தான் ஒழுக்கத்திற்கு அறிகுறியா? "இல்லை" என்று.

அவர் சாதி ஒழிப்புக் கொள்கை தலைசிறந்தது. குறிப்பிட்ட எவரும் கூறாத நேரத்தில், தைரியமாக, எளிய தமிழில் சொன்னார்! அதைப் பின் பற்றுவோமாக.

பின்னர்—நன்றி கூறுதலுடனும் வாழ்த்துப் பாவுடனும் கூட்டம் இனிது முடிந்தது.

இராதாமணாளன்-சந்திரா திருமணம்

கண்டியகல்லூர், செப். 6.

வந்தவாசிக் கடுத்த கண்டியகல்லூர் கிராமத்தில், தோழர் கே. ஜி. இராதாமணாளனுக்கும் தோழியர் சந்திராவுக்கும் வாழ்க்கையொப்பந்தம், 4—9—49-ம் நாள் ஞாயிறன்று காலை 9-மணிக்கு, தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் இனிது நடந்தேறியது. தோழர் க. அன்பழகன் அவர்கள நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தியபின் தலைவர் சிறிது நேரம் பேசினார்கள்.

பல நண்பர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வரப்பட்டு, படிக்கப் பட்டன.

வந்தவாசி திராவிடர் கழகத்தார்கள், திராவிடப் பாசறை உரிமையாளர்கள் கே. வி. டி. சீனிவாசன்-கே. வீ. டி. சடகோபன், தோழர் ஏ. கே. எம். பூபால், ஆரணித் தோழர்கள் ஹரிராம்-ஜெயலட்சுமி, தோழர் அப்துல்லா ஆகியோர் வாழ்த்து மடல்கள் வாசித்தளித்தார்கள்.

சென்னை, வந்தவாசி, ஆரணி, காஞ்சிபுரம், தெள்ளார், தேசூர், மருதாடு ஆகிய பல ஊர்களிலிருந்து ஐந்நூறுக்கு மேற்பட்ட இயக்க அன்பர்கள் வந்திருந்தார்கள்.

உண்மை 'பாரதியார்' உங்களிடம் காட்டப்படவில்லை

சென்னை, செப். 7—

சென்னை, பச்சையப்பன் கல்லூரியில், கல்லூரிமண்டபத்தில் 6-9-49 மாலை 5-மணிக்குப் "பாரதி" விழா புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மாணவ, மாணவிகளும் பொதுமக்களும் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

மாணவத் தலைவர் தோழர் N. சஞ்சீவி அவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவர் கூறியதாவது:—

"இப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பெருமன்றம் பற்பல பேச்சாளர்-எழுத்தாளர்-நாடாள்வோர் யாவரையும் வரவேற்றுள்ளது. ஒரே ஒரு குறை இருந்தது. அதுதான் புரட்சிக் கவிஞரை வரவேற்காதது. "பாரதி" விழாவை இங்கு எழுந்தருளியிருக்கும் புரட்சிக்கவிஞரின் இதயத் துடிப்பிலே தான் காண்கிறோம்,' எட்டய புரத்திலே கட்டியுள்ள மணி மண்டபத்தில் அல்ல"

புரட்சிக் கவிஞர்

பின்னர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமை உரை ஆற்றினர். "என்னைப் பாரதி விழாவுக்குத் தலைமை தாங்க அமைத்ததற்காக உங்கட்கும் பெரிதும் நன்றி செலுத்துகிறேன்.

என்னை யாரும் "பாரதி பற்றிப்பேச அழைப்பதில்லை, "பாரதி", "பாரதி" என்று கொம்மாளமடிக்கும் கூட்டம் என்னைக் கூப்பிடுவதில்லை. ஏன்? நான் வந்தால் உண்மைப் பாரதியைப்பற்றிக் கூறிவிடுவேன். அவர்கள் காட்டி வரும், பேசிவரும் வர்ணம் தீட்டப் பட்ட பாரதியார் மறைவார் என்ற பயம்தான்.

நான் பாரதியாரைப் பற்றிச்சொல்கிறேன்.

1906-ல் தான் பாரதியார் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ. வெ. சு. அய்யர், திருவல்லிக்கேணி சீனிவாசாச்சாரியார், அரவிந்தகோஷ் முதலியோரும் வந்தனர்.

இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ. ரா - முதலியோர் ஒரு குழு.

வ. வெ. சு. அய்யர் முதலியோர் ஒரு குழு.

பாரதி - நான் முதலியோர் ஒரு குழு. சீனிவாசாச்சாரியார் எதிலும் இருப்பார். மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர்—தமிழ் என்று ஒருமொழி இருப்பதையோ அதைப்பற்றி நினைப்பதையோ, அறியாதவர்.

வ. வெ. சு. அய்யர் வர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றத்தயார், பாரதியார்-தமிழிலேயே வாழ்ந்தார்.

அன்றையசிலே அப்படி! பாரதியார்-பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப்போற்றினர். காரணம் அவர் தமிழ்ப்புலவரின் மகன் என்பதுதான்.

பாரதியார் முதலில் பாட ஆரம்பித்தது காவடிச்சிந்துதான். புரியும்படி காவடிச்சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் "Asia" "ஆசியா" பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால் பாரதியோ தமிழில் "இந்தியா" பத்திரிகை ஆரம்பித்தார். தமிழைப்பாரதி இப்படிப் போற்றினர்.

அங்கே—அரவிந்தர் குழுவிலே என்ன சங்கதி?

Bengali— வங்காளம் சிறந்த மொழி அடுத்தாற்போல் தெரிவது ஆங்கிலம்தான்.

ஆங்கிலப் புத்தகத்தைப் "பாஷை" வெளியே தெரியும்படி வைத்துக்கொண்டு உலாவுவார்கள். நான் பாரதியிடம் என்னகண்டேன் அவர் வாழ்க்கை எப்படி? என்பனவற்றைப் பின்னுரையில் கூறுகிறேன்".

தோழர் குலசேகரன்

பின்னர் மாணவத் தோழர் குலசேகரன் அவர்கள் பேசினார்—அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:— "பாரதியார் தமிழ் மொழியை மிகவும் போற்றினர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் எங்கும் கண்டதில்லை" என்று கூறினர். அது மட்டுமா?

"வேறு வேறு மொழி கற்பீர்-ஆனால் வீட்டு மொழி கற்கிலீர்" என்று பாடியதை "இந்தி" பக்தர் அறியவேண்டும்" என்றார்.

சாதி ஒழிப்பே அவரின் தலை சிறந்த கொள்கை

"சூத்திரனுக்கு ஒரு நீதி; தண்டச் சோற்றுப் பாப்புக்கு ஒரு நீதியா?"—என்று கேட்டார்

அன்று வைதவர்கள் இன்று வாழ்த்துகிறார்கள்

பச்சையப்பன் கல்லூரியில் புரட்சிக்கவிஞர் பேருரை

தோழர் மா. இராசமாணிக்கம்

அடுத்து - விவேகானந்தா கல்லூரித்தமிழ்ப் பேராசிரியர், மா. இராசமாணிக்கம் பேசினார். அவர்தம் பேச்சில் குறிப்பிட்டதாவது:—

"இன்றும்மாணவரிடையே, தமிழ் மாணவரிடையே என்றும் காணாத காட்சி, எங்கள் காலத்தில் காணாத ஓர் எழுச்சியைக் காண்கிறேன். தமிழுக்கு அத்தனைப் பெருமை வந்திருக்கிறது.

"நான் கண்ட பாரதி" என்று கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஓர் நூல் எழுதி அவர் உண்மைச்செய்திகளை வெளியிட வேண்டும், உண்மைவரலாற்றை எழுத வேண்டும்.

1923ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட பாரதி நூலில் கண்ட பலபாட[illegible] வரிகள் இன்றைய பதிப்புக்களில் காணோம். இதுவருந்தற் பாலது. பாரதியார் - நாட்டுப்பற்று மிக்கவர். அவர் சமுதாய சீர்திருத்தத்திற்காக வாழ்ந்தார். ஜாதிகள், நாட்டை அரித்துக் கொண்டிருக்கும் கொடிய நோய்கள் என்பதை உணர்ந்தார். எனவே அதைக் கண்டித்தார்.

பாரதியார் வெறியோடு பாடினர் என்று பலர் கூறுகிறார்கள். அது தவறு.

பாரதி நாட்டின், சமுதாயச் சீர்கேட்டை நன்றாக உணர்ந்துதான் பாடியிருக்கிறார்.

நாம் இன்னும் உதட்டளவோடு ஜாதி ஒழிப்புபற்றிப் பேசுவதில் பிரயோஜனமில்லை, உள்ளன்போடு பாடுபட வேண்டும்.

அகவாழ்க்கை ஒன்று புற வாழ்க்கை வேறாக வாழ்வது மனிதத்தன்மை அல்ல.

சொல்லொன்று, செயல் வேறாகக் காட்சியளிக்கக்கூடாது.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா", என்று பாடிவிட்டால் மட்டும் போதாது. செயலில் காட்டவேண்டும். "பாரதி" அதற்குத் துணை என்று முடித்தார்.

தோழர் மகாதேவன்

இதற்குப்பின்னர் மாகாணக்கல்லூரித்தமிழாசிரியர் தோழர் மகாதேவன் அவர்கள் பேசுகையில் 'சங்க காலக்கவிகள் மக்களைப் பற்றிப்பாடினர். ஆனால் அது இடைக்காலத்தில் மறைக்கப்பட்டது.

எந்தப்புலவனும் மக்கள் தேவையை, பசியை உணர்ந்து பாடவில்லை.

மக்கள் தேவையை, பசியை அறிந்து பாடிய புலவர்களில் முதல் "பாரதியார்தான்" மடமை இருள்போக்க வந்த 'விடிவெள்ளி' என அவரை அழைக்கலாம்.

அதற்குப்பின்தோன்றின பெருங் கதிரவன் "பாரதிதாசன்" ஆவார்.

இப்போது பாரதியார் நூலில் கத்திரிக்கோல் பிரயோகம் செய்து பலவரிகளை எடுத்துவிடுகிறார்களே, இது அநீதி.

"பாரதி வழியை நன்றாகப் படைத்துத்தரும் பணியை" பாரதிதாசன் தொடர்ந்து செய்வாராக.

அடுத்துப்பேசிய மாணவத் தோழர் ராஜவேலு அவர்கள் பாரதியார் பாடல்களின் பெருமை பற்றியும் அதில் அவர் கையாண்டிருக்கும் கற்பனையைப்பற்றியும் அழகாக எடுத்துக்கூறினார்.

பாரதிதாசன் பின்னுரையில் பேசியதாவது.

நான் கண்ட பாரதி

"நண்பர் ராசமாணிக்கம் அவர்கள் என்னைப்பாரதியாரைப் பற்றி" நான் கண்ட பாரதி "என்ற தலைப்பில் ஒரு புத்தகம்" எழுதும்படி கேட்டார். இதே போல் முன்பே "தினசரி" ஆசிரியர் சொக்கலிங்கமும் கேட்டார்.

நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

இன்றுபாரதி பாட்டைப்புகழ்பவர்கள், உண்மைப் பாரதியை மறைத்து விட்டார்கள். மறைத்து விட்டதாக நினைத்து மனப்பால் [illegible]கிறார்கள். ஆனால் அவர்களையும் [illegible] "ஜாதிகள் இல்லையடி பாப்பா" முதலிய பாடல்கள் வந்து விட்டன பதிப்பில்.

"ஜாதியே இல்லை" என்ற பிறகு இவர்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார் மட்டும், அதிலும் குறிப்பிட்ட ஒரு சில மடையர்கள்! ஏனோ இப்படிப்பட்ட வீண்வேலையில் ஈடுபடுகிறார்கள்.

பாரதியின் முக்கியக்கொள்கை

பாரதியார் தமிழ்ப் பற்றுடையவர். தமிழுக்கு உயிர் உண்டாக்கினர். எல்லோருக்கும் புரியும்படி எழுதினர், பாடினர்.

அதற்குப் பிறகுதான் அரவிந்த கோஷுக்குத் "தமிழ்" என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது.

வ. ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் பிடித்தனர்.

பாரதியாருடைய முக்கியக் கொள்கை, "சாதி ஒழிப்பு" அது தான் அவரிடமிருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை.

அவர் பாடியிருக்கிறார்.

"சூத்திரனுக்கு ஒரு நீதி தண்டச், சோற்றுப் பாப்புக்கு ஒரு நீதி", என்று.

இது எங்கே? அவர் புத்தகத்தில் இல்லை. என்னிடம் இருக்கிறது.

மறைத்து விட்டனர்! சுயநலம் கருதி.

பாரதியார் செத்ததற்கே அது தானே காரணம். இத்தகைய பழிவாங்கப்பட்டார் என்றுதான் நான் கருதுகிறேன்.

இப்போது ஜாதி சேப்பங்கட்டி இழுக்கிறது. சீக்கிரம் இறந்துபடும். சந்தேகமில்லை.

பாரதியார்-பார்ப்பனர். தெரிந்தும் சொன்னர், "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று.

'பாரதிதாசன்'—புனைபெயர்

தமிழில், நல்ல, எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னர். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட. நான் அப்போது பாண்டிச்சேரியில் வாத்தியார்வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும் பாட்டுக்களும் எழுதியனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்திலிருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்தியோகத்திற்குத் தொல்லை தரும் - யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக்கொள்ள விரும்பினேன்; அப்போது என் கண் முன்னே 'சூத்திரனுக்குஒருநீதி தண்டச் சோற்றுப் பாப்புக்கு ஒரு நீதி' என்று கேட்ட பாரதியார்-பார்ப்பனனாயிருந்தும், பயப்படாது, தீமை வரும் என்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில், புரியும்படி சொல்லிய பாரதியார்தான், நின்றார்.

உடனே "பாரதிதாசன்" என்று புனைபெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்தப் புண்ணியவானுக்கு, தன் குலத்தார் எதிர்ப்பையும், பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை, என்று கருதுகிறேன்.

பாரதியார் கஷ்டப்படவில்லை

பலர் பாரதியார் மிகவும் கஷ்டப்பட்டார்-வறுமையில் உழன்று அவஸ்தைப் பட்டார்—என்றெல்லாம் கூறுகிறார்கள். வருத்தப்படுகிறார்கள். பெரிய பிரச்சாரம் வேறு நடக்கிறது. நான் சொல்லுகிறேன், பாரதியார் கொஞ்சம்கூடக் கஷ்டப்படவேயில்லை. அவர் புதுவையில் 13 வருடங்கள் இருந்தார். அவரோடு நானும் கூடவே இருந்தேன்.

தெரியாதவர்கள் கூறும் சங்கதி தான் அது. அவர் கஷ்டப்படவேயில்லை. அவர் சுருட்டுப் பிடிக்கும் பழக்கமுடையவர்.

பாண்டிச்சேரியில், சுருட்டிய சுருட்டு (இங்குப்போல்) விற்க மாட்டார்கள். புகையிலையாக வாங்கி அதைச் சுருட்டாகச் சுருட்டித்தான் பிடிக்கவேண்டும்.

இப்படிச் சுருட்டுப்பிடிக்க பாரதியாருக்குத் தெரியாது. ஆனால் அவர் பாண்டியை விட்டு வெளிவரும் வரை அவர் சுருட்டு வேண்டும் என்று நினைத்த மறுகணம், சுருட்டை அவர்முன் சுருட்டிவைப்பர் பக்கத்திலிருப்பவர். அவ்வளவு சவுகரியம் இருந்தது. அவருக்கு அங்கே. அதுமட்டுமா! அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது.

டாக்டர் அம்பு வந்தார். விஷக் காய்ச்சல் என்று கூறினர். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார்.

வேறு வீடு வேண்டும் என்ன செய்வது.

என்ன நடந்தது என்று நினைக்கிறீர்கள்.

சுமார் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குள்ளாகவே, அவர் வீட்டிற்கு எதிர்த்த வீடு, குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடும்பத்தோடு குடியேறினர். எப்படி முடிந்தது? யார் வீடு அது தெரியுமா?

ஒரு பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்குப் பாரதியார் அளித்தபெயர் 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்பது. அதில் குடியிருந்தவர் ஒரு C.I.D. அவர் ஒரு பெண்ணை அங்கு வைப்பாக வைத்திருந்தார்.

அப்படிப்பட்ட செட்டியாரிடம் (செட்டியார் பணவிஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்.) முன் பணம் கட்டி, அங்கிருந்த C. I. D. அவர்களைக் காலி செய்து பாரதியாரைக் குடியேற்றினோம்?

யார்? நானும் என்போன்ற நேசர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம் பாரதி வருத்தப்படக் கூடாது அவர்மகளுக்குக்காய்ச்சல், கேணி நல்லதல்ல' வீடுமாற வேண்டும். உடனே சென்றோம். காலி செய்யச்சொன்னோம். பயந்தேகாலி செய்தனர். இப்படியும் இருக்குமா? நடக்குமா? என்று நினைக்கலாம். நம்பவேண்டிய சேதி-ஏன்? நான் சொல்லுகிறேன், என்பதால்.

அவருடைய சாப்பாட்டிற்கோ, குடும்ப சவுகரியத்துக்கோ-ஒன்றும் குறைவில்லை. கஷ்டமும் இல்லை. கஷ்டப்பட்டார் என்று சொல்வது வெறும் பொய்.

பின் எப்படி இந்த வதந்தி "பாரதி கஷ்டப்பட்டார்" என்று பரவிற்று? சொல்கிறேன் கேளுங்கள்.

வைரத்தோடு இல்லை! அதுதான் கஷ்டம்!

எதைக் கொண்டு பாரதியார் கஷ்டப்பட்டார் என்று சொல்லுகிறார்கள்? அவருக்குச் சோறில்லையா? இருந்தது. வசதியாக.

பாண்டியிலே அப்போது இருந்த சீனிவாசாச்சாரியார் வீட்டுப்பெண்கள் எல்லாம் வைரநகைகள் அணிந்து விளங்கினர். வ. வெ. சு. அய்யர் வீட்டிலும் அவ்வாறே. ஆனால் பாரதியார் வீட்டிலோ சிகப்புக்கல் தோடுதான், அதுவும் அப்பாழி காலத்தது. இதுதான் நிலை.

அவர் வீட்டில் சதா "அவர் வீட்டில் அந்த நகை இருக்கு! இவர் வீட்டில் இப்படி, இந்தநகை; நம்ம வீட்டில் என்ன இருக்கு" என்று தொல்லைப் படுத்துவார்கள், என்று பாரதியார் அடிக்கடி கூறிவருந்தப் படுவார்.

அவர் வீட்டில் வாழவழி இருந்தது — ஆனால் வைரத்தோடுகள் இல்லை-உண்மை சாப்பிடக் கஷ்டம் இல்லை. சரியானநகைகள் இல்லை. இது வறுமையா? கஷ்டமா?

நகையில்லாத குறைதான். டாம்பீகம் வேண்டுமா? பலமுறை அவர் குடும்பத்தார், பிறந்த வீட்டிற்குச் செல்வர். அப்போதெல்லாம்கூட அவருக்குஒரு குறைவுமின்றித்தான் எல்லாம் நடந்தது. வறுமை, கஷ்டம் என்று கூறுவது சுத்தப் பொய்! அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழிபெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒருதீவு பற்றிய செய்தி வெளிவந்தால், அது எங்குள்ளது என்பதுபற்றிய குறிப்பு பிராக்கட்டுகளுள் (அடைப்புக் குறிகளுள்) அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள அறியவேண்டிய செய்தி.

புதுமுறை நூல்கள்

தமிழில் புது முறையில், மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார்தான். அதற்கு முன்

[தொடர்ச்சி ?-ம் பக்கம் பார்க்க]

சிந்தனைக்கு விருந்து!

"பாரதி" விழாக கொண்டாடும் இந்நாளில் மக்கள் படிக்கவேண்டிய மகத்தான புத்தகம்

"மகாகவி பாரதியார்"

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தோழர் அண்ணாதுரை M. A., தீட்டியது.

விலை அணா ஆறுதான்.

தனிப்பிரதிக்கு ஏழணா தபால் தலைகள் அனுப்புக.
வியாபாரிகளு 25% கழிவு. செலவு இனாம்.

அறிவுப்பண்ணை

6, மங்கம்மாள் தெரு,
எழும்பூர், சென்னை-1.

தொண்டதை...

—[1-ம் பக்கம் தொடர்ச்சி]—

விஷயத்தில், திரும்ப யோசித்துப் பார்ப்பது நல்லது என்று, சென்னை சர்க்காருக்கு, ஒரு தீர்மானம் மூலம், வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இதுவும், தமிழ் நாட்டில்!

கிடைத்ததையா பதில் இறுதியாக, சென்னை சர்க்காரிடமிருந்து. 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற போக்கிலே, போட்ட உத்தரவு முடிந்த உத்தரவுதான்; புனராலோசனை செய்ய முடியாது' என்று சென்னை சர்க்கார், விழுப்புரம், நந்தியால், குடியேற்றம், முதலிய நகரசபைகளுக்கு முடங்கல் தீட்டிவிட்டுவிட்டது. இந்த உத்தரவுக்குப் பணியாமல், மேற்படி நகர சபைகள் நடந்து கொண்டால், கதர் வாங்கினால், கேள்வி பிறக்கும், சர் சார்ஜ்வரும், நகர சபைகள் கலைக்கப்படும். வரிப் பணத்தைச் சிக்கனமாக-ஆனால் பயன் தரும் முறையில்—செலவிட விரும்பும், பொறுப் புணர்ந்த நகர சபைகளுக்கு. இந்த எதேச்சாதிகார ஆளவந்தார்கள் தரக் காத்திருக்கும்பரிசு நகர சபைகளைக் கலைப்பதுதான்!

தாங்கள் எப்படி, கதர் பெயர் கூறி, நாட்டு மக்களிடம் கெடுபிடி செய்து வரியாக வசூலிக்கும்பணத்தை, உருப்படாத கதர்த் தொழிலுக்கு மான்யம் கொடுத்துப் பாழாக்குகிறார்களோ, அதனையே, மேற்கொள்ளவேண்டுமென்று, தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் நகர சபைகளையும் வற்புறுத்துகிறார்கள். நகரசபைப் பிரதிநிதிகளின் விருப்பத்திற்கு மாறாகவும் மக்கள் வரிப்பணம் பாழாக்கப்படுகிறது என்பதுமட்டுமல்ல, நகர சபைகளின் உரிமைகளையும் பறிக்கிறார்கள். ஆளவந்தார்கள். இச்செய்கை மூலமாக, தாங்கள் தவறு செய்வதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களையும் தவறு செய்யக் கட்டாயப்படுத்துகிறார்கள், சென்னை சர்க்காரில் இடம் பெற்றுள்ள செல்லும் சொல் படைத்தவர்கள். மற்றவர்கள் தவறு செய்ய மறுத்தாலும், நல்லது செய்ய விடமாட்டோம் என்று மிரட்டி அதட்டி அச்சுறுத்தி, தவறு செய்யப் பலவந்தப்படுத்துகிறார்கள், பாராளும் பதவி பெற்றிருப்போர். ஆளவந்தார்களின் சேர்மைக்கும்-நிலைபைக் கடைப்பிடிக்கும் தன்மைக்கும், உரிமைகாக்கும் பண்புக்கும், இது நல்லதோர் உதாரணமாகும்.

திருச்சி நகரசபை, ஆளவந்தார்களின் ஆக்ஞையைச் சிரமேற் சுமந்துகொண்டு, நகரசபை ஊழியர்களுக்குக்கதர் ஆடையே, அளிப்பதென்று முடிவிற்கு வந்து விட்டிருக்கிறது. மக்கள் வரிப்பணத்தை, வகையற்ற முறையில், விண்விரயம் செய்ய முன்னேடும் பிள்ளையாகிறது திருச்சி நகரசபை! மனத்திருப்தியோடுதான், இந்தக் கதர் வாங்கும் கட்டளையை திருச்சி நகரசபை நிறைவேற்றுகிறதோ அல்லது கட்டளையை மீறினால் கலைக்கப்படும் என்னும் கருங்கல்பாறை தலைக்கு மேல் தொங்கிக்கொண்டு இருப்பதைக் கருத்தில் கொண்டுதான், கதர் வாங்கி திருச்சி மக்களுக்குக்கேடு செய்வது என்று தீர்மானித்து விட்டதோ? எவர் கண்டார்கள் திருச்சியின் போக்கில் மறைந்திருக்கும் உண்மையை! திருச்சியின் முடிவிற்கு எது காரணமாக

இருந்தாலும், திருச்சி நகர மக்களின் வரிப் பணம் வீணாகிறது என்பதில் ஐயமில்லை.

ஆளவந்தார்கள், தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் நகர சபைகளுக்கு அளித்துள்ள 'உரிமை'யின் இலட்சணம் இதுதான். இந்த உண்மையை உணரும் பொது மக்கள்.

திருவாரூர் மாநாடு!

திருவாரூரில் நடைபெறப் போவதாகக் கருதப்படும் மாநாட்டிற்குப், பெரியாரின் ஆலோசனையின் பேரில் சர். ஆர். எஸ். சர்மாவிடம் நன்கொடை வசூலிக்க, தூது ஒன்று சென்றதாம். சர்மாவும் ரூ. 100 நன்கொடை வழங்கியுள்ளாராம்.

தஞ்சை ஜில்லா திராவிடர் கழக மாநாட்டைக் கூட்ட வேண்டி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, வரவேற்புக்குழு ஒன்று, தோழர் ஆர். ரங்கராஜு தலைமையில் அமைக்கப்பட்டதாம். அந்தக் குழுவைப் புறக்கணித்துப் புதிதாகக் குழு அமைக்கப்பட்டது எந்த நீதியில்? அந்தக்கமிட்டி கலைக்கப்பட்டதா? தான் ஒத்துழைக்க மாட்டேன் என்றதீர்மானத்தால், வேறு கமிட்டியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டு விட்டதா? என்று தோழர் ரங்கராஜு கூறுவதாகச் சொல்லப்படுகிறது.

தோழர் ரங்கராஜு கழக வேலைகளையெல்லாம் தலை முழுகி விட்டுத், தொழிலில் கவனஞ் செலுத்தத் தீர்மானித்து விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

குடந்தையில் அண்மையில் நடந்த கூட்டத்திற்கு அவர் சென்றதற்கு ஆதரவாளர் கொடுத்த தொல்லைகளே காரணமாகும் என்று அவர் கூறுகிறாராம்.

பிள்ளையார் முடியைப் பறிகொடுத்தார்!

வேலப்பாடி, செப். 5—

வேலூரைச் சேர்ந்த வேலப்பாடியில், பிள்ளையார் கோவிலிலுள்ள பிள்ளையார், தனது வெள்ளிமுலாம் பூசின முடியையும், நெற்றிப் பட்டையையும் இழந்து பரதவிக்கிறார்! திருடன் வெளவியென ஏமாந்து திருடிச் சென்றுவிட்டதாகத்தெரிகிறது. ஒருக்கால் பிள்ளையாரே அப்படி ஏமாற்றி இருக்கலாமோ! செய்தாலும் செய்திருப்பார! அவர்தான் 'எல்லாம் வல்ல' முதல்வனாயிற்றே! என வேலப்பாடித் தோழர் ஒருவர் எழுதுகிறார்.

வள்ளுவர் மன்றம் தோற்றம்

சென்னை, செப். 7.—

சென்னை குட்டி மேஸ்திரி தெரு 36-ம் எண் கட்டிடத்தில், வள்ளுவர் மன்றம் 4-9-49, மாலை 5-மணிக்குத் தோற்றுவிக்கப்பட்டது.

கூட்டத்திற்குத் தோழர் டி. ரங்கசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் பி. முருகேசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. தோழர் கே. தேவசகாயம் நன்றி கூற, சிற்றுண்டி தேநீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

சர். பி. தியாகராயர் நினைவு நாள்

5000-க்கு மேற்பட்ட மாபெருங் கூட்டம்

கழகத் தோழர்களின் முழக்கம்

சென்னை, செப். 5—

சர். பி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டம், நேற்றுமாலை வண்ணையம்பதிராபின்சன்பார்க்கில்மிகச் சிறப்புற நடந்தேறியது. கூட்டத்தில் 5000க்கு மேற்பட்ட மக்கள் சென்னை நாலாபக்கத்திலிருந்தும் வந்து குழுமியிருந்தனர்.

கூட்டம் வட சென்னை சீர்திருத்தக்குழுவின் சார்பாகக் கூட்டப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர்எம். கே. டி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் எம்.கே.டி. சுப்பிரமணியம்

தலைவர் தன்னுடைய முன்னுரையில், பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களின் தலைவராக விளங்கிய சர். பி. தியாகராயர், அந்தப் பேட்டையைச் சேர்ந்தவராகையால், அப்பேட்டையிலே அவர் நினைவுநாள் கொண்டாடவேண்டியது அவசியத்திலும் அவசியமாகிறது என்றும், காங்கிரஸ்காரர்கள், காவடிச் சாமியார்களைக் கொண்டு வந்து வைத்துத் திட்டுவதன் மூலம் கழகத்தை ஒழிக்கப்பார்க்கிறார்களென்றும், அதனால் கழகம் ஒழிந்துவிடப் போவதில்லையென்றும், அதுபற்றி யாரும் கலக்கமடையவேண்டாம் என்றும், திராவிடக் கழகக் கொள்கைகளை மறுத்துக் கூற எந்தக் காங்கிரஸ் தலைவர்களாலும் இயலாது என்றும், அப்படியாராவது முன் வருவதென்றாலும் நாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம் என்றும்கூறி தன்னுடைய முன்னுரைச் சொற்பொழிவைச் செய்து முடித்தார்.

அடுத்துத் தோழர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்கள் சர். பி. தியாகராயர் செய்த அரும்பணிகளைப்பற்றிப் பேசினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன்

பின்னர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார்கள். அவர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

சர். பி. தியாகராயரின் நினைவுநாளைக் கொண்டாட, நாம் அனைவரும் இங்குக் கூடியுள்ளோம். கூடுவதற்கான வாய்ப்பைச் சீர்திருத்தக் குழுவினர் செய்து தந்துள்ளனர்.

சர். பி. தியாகராயர் திராவிடப் பெருங்குடி மக்களின் எழுச்சியின் சின்னமாவார். அவர் வாழ்க்கை வரலாறு நமக்கு ஓர் எடுத்துக் காட்டு. அவர் விளைத்த கொள்கைகள் நமக்கு ஓர் விருந்து. அவர் வளர்த்த இயக்கம் நமக்கு ஓர் உணர்ச்சி. அவர் அமைத்துத் தந்த பாதை நாம் உயர்ச்சியடைய ஏறும் படிகள். அவரது நினைவு நமக்கு ஆக்கம் அளிக்கிறது. ஆகவே அவரது நினைவு நாளை அவர் வாழ்ந்து வளர்ந்த இந்தப் பேட்டையில் கொண்டாடுகிறோம்.

காலம் ஒன்று இருந்தது, அரசியல் உணர்வே மக்கள் அற்று இருந்தகாலம். தன் நாடு எது, மொழி எது, கலைஎது, நாகரிகம் எது என்று அறியாதிருந்த காலம். அந்தக் காலத்தில் தான் வெள்ளையர் குடியேறினார்கள். வாணிகக்களம் அமைத்தார்கள். பின் போர்க்களம் அமைத்தார்கள். இந்தியத்துணைக்கண்டம் முழுவதும் கைப்பற்றினர். ஆளத்தொடங்கினர். இந்தியர்களிலே படித்தவர்கள் வெள்ளை அரசாங்கத்திடத்தில் உத்தியோகங்களில் பங்கு கேட்டனர். வெள்ளைக்காரரும் ஆட்சியின் சுமையில் ஒரு பகுதியை இந்தியர் தலையில் ஏற்றிவைக்கப்பார்த்தனர். இரண்டு எண்ணமும் ஒன்றுசேர்க்க கூடியது 1885-ம் ஆண்டு. இந்தியதேசிய காங்கிரஸ் உருவாயிற்று; ஒரே கட்சிதான் அப்போது.

வெள்ளையரால் கொடுக்கப்பட்ட உத்தியோகங்களில், இந்துக்களே பெரும்பங்கினைக் கொள்ளை கொள்ள, முஸ்லிம்கள் வேதனைப்பட்டு வேறாகப் பிரிந்தனர் முஸ்லிம் லீக் என்ற பெயரில்.

தென்னாட்டைப்பொறுத்தவரையில் அரசியல் உத்தியோகங்களை அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மாக்களே அனுபவித்து வந்தனர். திராவிடப் பெருங்குடி மக்கள் அந்த ஆரிய இனத்தவரால் புறக்கணிக்கப்பட்டுவந்தனர். திராவிடர்கள் எவ்வளவு திறமை சாலிகளாகவும், படித்தவர்களாகவும் இருந்த போதிலும், அவர்கள் புறக்கணிக்கப்பட்டே வந்தனர். நூற்றுக்கு மூன்றுபேர்களாக உள்ளவர்கள் வாழ்க்கைவசதிகளையெல்லாம்பெறவும், நூற்றுக்குத் தொண்ணூற்றேழு மக்களாக உள்ளவர்கள் புறக்கணிக்கப்படவுமான நிலையை ஊன்றிக் கவனித்தார், சர். பி. தியாகராயர். பெருங்குடி மக்களுக்கு நீதி மறுக்கப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்தார். அதுவரையில் காங்கிரஸிலே பற்றுள்ளங்கொண்டிருந்த அவர் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு உழைக்க, தன சொந்த வாழ்வு எனும் இன்பச் சோலையை விட்டு வெளியேறினார். நீதிவேண்டினார்; நீதிக்காகப் போராடினார்; நீதியைப் பரப்பினார், நீதிக்கட்சியைத் தோற்றுவித்தார். அவர் வளர்த்து விட்டுச் சென்ற இயக்கந்தான் இன்று இவ்வளவு பெரிதாகக் கிளைத்தெழுந்து, ஓங்கி, உயர்ந்து, வளர்ந்திருக்கிறது.

அவர் நீதி கேட்க நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார். அந்த நீதிக் கட்சி இன்று திராவிடர் கழகமாக மாறி நீதி வழங்க முனைந்துள்ளது. அதன் எக்காள ஒலிதான் திராவிட நாடு திராவிடருக்கே என்பதாகும்.

அரசியல்- பொருளாதாரம்- சமத்துவம் ஆகியவற்றில் நீதி காணவே நாம் பாடுபட்டு வருகிறோம். நாம் எதிர் நீச்சில் இருப்பதால், நமக்கு ஏற்பட்டுள்ள ஆதரவு,குறைவுஎன்று வேண்டுமானால் கூறலாமே ஒழிய, நாம் கொண்ட கொள்கைகள் தவறு என்றுயாரும் சொல்லியதும் கிடையாது; யாராலும் சொல்லவும் முடியவில்லை.

திராவிடர்கழகத்தை-நமது கருத்துக்களை ஒழித்துக்கட்ட சில திட்டுதலிலும், வசைமாரி பொழிதலிலும் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. அழிந்து கொண்டிருக்கும் வைதிகக் கோலந்தாங்கி, அழிக்கப்பட வேண்டிய சாமியார்கள் நம்மைத்தாக்கிப் பேசுகிறார் என்று எண்ணி, நமது தோழர்களிலே சிலர் ஆத்திரப்படுகிறார்கள். ஆத்திரப்பட வேண்டிய அவசியமே கிடையாது. நமது கொள்கைகள் அப்படியொன்றும், தொட்டால் துவண்டு விடுவதாகவோ, திட்டினால் சொறுங்கி விடுவதாகவோ, உடைத்தால் உடைந்து விடுவதாகவோ, அவ்வளவு சாதாரண நிலைமையில் இல்லை. இன்னும் சொல்ல வேண்டுமானால், நமது கருத்துக்கள் எதிர்ப்புகளினாலேயே உருவாகி வந்ததாகும், நம்மீது வீசப்படும் ஒவ்வொரு வசைச்சொல்லும், தாக்குதலும், அடியும், உதையும் நம் இருதயத்தை இன்னும் வலிவுடையதாக்கும், குருதியோட்டத்தைக் குதித்தோடச் செய்யும், நரம்புகளை முறுக்கேறச் செய்யுமேயல்லாது நமமை வீழ்த்திவிடக் கூடியவை அல்ல. ஆகவே அதுகண்டு நம் தோழர்கள் கலங்க வேண்டிய அவசியம் இல்லை. இறந்து கொண்டிருக்கும் வைதிகத்தோடு அவர்களும் சேர்ந்து இறக்க வேண்டியவர்கள் தான்.

நம் கழகத்தில் ஏற்பட்டிருக்கும் நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் காங்கிரஸ்காரர்களிலே பலர் எண்ணுகிறார்கள். கழகத்திலே ஏற்பட்டிருக்கும் நிலை போன்ற பிளவு எந்த இயக்கத்திலும் ஏதோ வொரு காரணம் பற்றி ஏற்படக் கூடியதுதான் அதை அந்தந்த இயக்கத்தவர்களே அவர்களுக்குள்ளாவே தீர்த்துக்கொள்வார்கள். அதுபோல கழகத்தில் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்கள் கழகத்தவர்களே. இதில் மற்றவர்க்கு எதும் இடமில்லை. எங்களுக்குள் ஒத்துப்போவோமோ, எங்களுக்குள்ளாக ஒரு ஏற்பாட்டிற்கு வந்து விடுவோமோ, ஒருவரையொருவர் கலந்து வாழுவோமோ, ஒருவரையொருவர் வென்று வாழுவோமோ அது எங்களுக்குள்ளாகவே தீர்க்கப்படவேண்டிய விஷயமாகும்.

ஆகவே நம் தோழர்கள் கொள்கைகளைக் கடைப்பிடித்து, கொள்கைகளுக்காகவே வாழவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் அந்த உணர்ச்சியைச் சர் தியாகராயரின் நினைவுநாள் நமக்கு அளிக்கட்டும்"

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் நன்றி கூறக்கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

பிறப்பு

21—5—48-ல் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டவரும், திராவிடர் கழக ஆதரவாளருமான விருத்தாசலம் தோழர் மே. மு. கேசவன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார்முல்லை அவர்களுக்கு,22-8-49-ல் பெண் மகவு பிறந்து, குழந்தைக்குப் "பூங்கொடி" என்று பெயரிடப்பட்டது. அதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம்

ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

வெளிவருகிறது! விரைவில்! வெளிவருகிறது!

"புதுவாழ்வு" (அரசியல் வார இதழ்)

நிர்வாக ஆசிரியர்: ஏ. வெ. கி. சம்பத்து

தனி இதழ் ... ரூ. 0—2—0

ஆண்டுக் கட்டணம் ரூ. 6—0—0

விபரங்கட்கு:— நிர்வாகி, "புதுவாழ்வு"

34, வன்னியர் தெரு,

கிருஷ்ணபுரம், சென்னை-21.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras 1.